

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.09.2023) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் தமிழ்ப் பரப்புரைக் கழகத் திட்டத்தின் கீழ், தமிழ் கற்பிக்கும் தன்னார்வலர்களுக்கான ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் பதிவு செய்வதற்கான இணைய இணைப்பு மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த இணையதளத்தினையும் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைச் செயலாளர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு மின்னணு நிறுவன மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். அனீஷ் சேகர், தமிழ்நாடு மின்னணு நிறுவன செயல் இயக்குநர் எஸ். அருண் ராஜ், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பி.சி. நாகசுப்பிரமணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.09.2023) தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் அரசு சமுதாய உடல்நல மையத்தைப் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ரூ.150 கோடியில் 1000 புதிய வகுப்பறைக் கட்டடங்கள் திறப்பு!

# கிராம ஊராட்சிகளில் வரி செலுத்த இணையதளம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, செப். 27 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 150 கோடி ரூபாய் செலவில் 37 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 1000 புதிய வகுப்பறைகளை திறந்து வைத்தார். மேலும், கிராம ஊராட்சிக்கு பொதுமக்கள் வரி / கட்டணங்கள் செலுத்துவதற்கான இணையதளம் மற்றும் தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சிக் கணக்குகள் திட்டத்திற்கான இணையதளம் ஆகியவற்றை தொடங்கி வைத்தார்.**

கல்விக்கு முக்கியத்துவம் அளித்திடும் வகையில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், எண்ணும் எழுத்தும், இல்லம் தேடி கல்வி, பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பல்வேறு வரலாற்று முன்னெடுப்புகளை நிறைவேற்றி வருவதன் தொடர்ச்சியாக, ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு சுமார் 800 கோடி மதிப்பீட்டில் 6 ஆயிரம் புதிய வகுப்பறைகள் கட்டப்படும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110ன் கீழ் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

இத்திட்டம் “குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்” என்று ஊரகப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டம், காட்பாடியில் 1.2.2023 அன்று நடைபெற்ற அரசு விழாவில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய வகுப்பறைகள் கட்டும் பணிக்கு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 8 மாத காலத்தில் முதற்கட்டமாக, குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 150 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 1000 புதிய வகுப்பறைகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**குழந்தை நேய சிறப்பு அமைப்புகள்!**

இக்கட்டடங்கள் அனைத்தும் குழந்தை நேய சிறப்பு அமைப்புகளான உயர்த்தப்பட்ட மேற்கூரை, விசாலமான தாழ்வாரம், காற்றோட்டமிக்க ஜன்னல் வசதிகள், வழுக்காத தரைகள், கற்றலை ஊக்குவிக்கும் சுவர் ஓவியங்கள், வாழ்க்கைப் பாடங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

**கிராம ஊராட்சிகளில் வரி செலுத்தும் முனையம்!**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2022-23ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், கிராம ஊராட்சிகளுக்கு பொதுமக்கள் செலுத்த வேண்டிய வீட்டுவரி, தொழில்வரி, குடிநீர்க் கட்டணம், உரிமக் கட்டணம் போன்றவற்றை தற்போது ஊராட்சி அலுவலகங்களுக்கு நேரில் சென்றோ, ஊராட்சி செயலர் மூலமோ செலுத்த வேண்டியுள்ளது. இச்சேவைகள் அனைத்தும் இணைய வழியில் பெறும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பொதுமக்கள் கிராம ஊராட்சிகளுக்கு செலுத்த வேண்டிய வீட்டுவரி, தொழில் வரி, குடிநீர்க் கட்டணம், வரியல்லாத கட்டணங்கள் போன்றவற்றை இணைய வழியில் செலுத்தும் வகையில் தேசிய தகவலியல் மையத்தால் (National Informatics centre) உருவாக்கப்பட்டுள்ள https://vptax.tnrd.tn.gov.in/ என்ற வரி செலுத்தும் முனையத்தை (Online Tax Portal) பொதுமக்கள் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார்.

இவ்விணையதளத்தின் மூலமாக இணைய வழி கட்டணம் (Online Payment), ரொக்க அட்டைகள் (Debit / ATM Cards Payment), கடன் அட்டைகள் (Credit Card Payment), யுபிஐ கட்டணம் (UPI Payment) மூலம் செலுத்திட முடியும்.

இதன்மூலம், பொதுமக்கள் எளிதாக 24x7 முறையில் எந்நேரத்திலும் வரி / கட்டணம் செலுத்திட இயலும். இதன்மூலம் ஊராட்சி பணியாளர்களின் பணிச்சுமை பெருமளவு குறைவதோடு, கிராம ஊராட்சியின் பொறுப்புணர்வும், வெளிப்படைத்தன்மையும் உறுதி செய்யப்படும். மேலும், பெறப்படும் வருவாய் இனங்களின் மூலம் கிராம ஊராட்சியின் அடிப்படை வசதிகளையும் மேம்படுத்த இயலும்.

**எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சிக் கணக்குகள்!**

கிராம ஊராட்சிகள் தற்போது ஊராட்சியின் பொதுநிதி, மின் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம், அரசின் திட்டப் பணிகள் போன்ற பல்வேறு பொறுப்புகளை மேற்கொள்ள 11 வகையான கணக்குகளை பராமரித்து வருவது கடினமான செயலாக உள்ளதால், அதனை எளிமைப்படுத்தும் விதமாக தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சிக் கணக்குகள் திட்டத்தை உருவாக்கி, 3 கணக்குகளை மட்டுமே பராமரிக்கும் நிலையினை இந்தியன் வங்கியின் ஒத்துழைப்புடன் ஏற்படுத்தியுள்ளது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சிகள் கணக்குகள் திட்டத்தின் TNPASS என்ற புதிய இணையதளத்தைத் தொடங்கி வைத்தார்.

இதன்மூலம், கிராம ஊராட்சித் தலைவர்கள் மேற்கூறிய கணக்குகளின் இருப்பு விவரங்களை அறிய வங்கி அலுவலரைச் சார்ந்திருத்தலைக் குறைத்து, ஊராட்சிக்குத் தேவையான பணிகளை நிதி இருப்பிற்கு ஏற்ப உடனடியாக மேற்கொள்ளவும், நிதிப் பரிவர்த்தனைகளை நிகழ்நேரத்தில் அறிந்திடவும் இயலும்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா. பொன்னையா, இந்தியன் வங்கியின் செயல் இயக்குநர் எம்.கே. பஜாஜ், மாநில தகவலிய அலுவலர் சி.ஜே. அந்தோணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### பெண் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் நியமனம்!

# பெரியாரின் கனவு நிறைவேற்றம்! சமூக நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வரவேற்பு!

*சென்னை, செப். 27-*

*பெண் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் நியமிக்கப்பட்டதன் மூலம் பெரியார் கண்ட கனவை முதல்வர் மு.க. ஸ்டாலின் நிறைவேற்றி யுள்ளார். தமிழ்நாட்டில் சமூக நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வரவேற்றுள்ளது.*

*இதுகுறித்து 26.09.2023 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-*

*தமிழ்நாட்டில் இப்போது 20 அர்ச்சகர் பயிற்சி பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இதுமட்டுமல்லாமல் தற்போது 10 கோவில்களில் தேவாரம், திருவாசகம், திவ்யபிரபந்தம், பாசுரங்கள் பாட 10 பெண் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் திட்டத்தின் கீழ் 3 பெண்கள் அர்ச்சகர் பயிற்சி முடித்ததையொட்டி, முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், “பெண்கள் விமானத்தை இயக்கினாலும், விண்வெளிக்கே சென்று வந்தாலும், அவர்கள் நுழைய முடியாத இடங்களாக கோவில் கருவறைகள் இருந்தன. பெண் கடவுளர்களுக்கான கோவில்களிலும் இதே நிலை இருந்தது. ஆனால், அந்நிலை இனி இல்லை!. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக முடியவில்லையே என பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை, நமது திராவிட மாடல் ஆட்சி அகற்றியதில், கரு சுமக்கும் பெண்களும் இனி கருவறைக்குள்” என்று பெருமையோடு கூறியிருந் தார்.*



தலையங்கம்
தினத்தந்தி
26.9.2023 (செவ்வாய்க்கிழமை)
பெண் அர்ச்சகர்கள், ஓதுவார்கள்!



*தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் கோவில்களும், எண்ணற்ற கிராம கோவில்களும் உள்ளன. அங்கு பூஜைகள், அபிஷேகம் செய்ய பூசாரிகள், குருக்கள், ஓதுவார்கள், அர்ச்சகர்கள் இருப்பார்கள். மூலவர் இருக்கும் கருவறைக்குள் அவர்கள் மட்டுமே செல்ல முடியும். இதுவரையில் அர்ச்சகர்கள், ஓதுவார்களெல்லாம் ஆண்களாகவே இருந்தார்கள். அதுபோல சில குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே அர்ச்சகர்களாக இருக்க முடியும் என்ற நிலை காலகாலமாக இருந்தது. தந்தை பெரியார் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று, தான் உயிரோடு இருக்கும் வரை வலியுறுத்திக் கொண்டே இருந்தார். இதற்காக பல போராட்டங்களை நடத்தியதுடன், பல மாநாடுகளிலும் தீர்மானமாக கொண்டுவந்தார்.*

*இந்த நிலையில், கலைஞர் ஆட்சிக்கு வந்தவுடன், இதற்கான சட்டத்தை நிறைவேற்றினாலும், அந்த சட்டம் சுப்ரீம் கோர்ட்டில் சாதகமான பதில் கிடைக்காமல் முடக்கப்பட்டது. மீண்டும் சட்டப்போராட்டங்கள் எம்.ஜி.ஆர்., ஜெய லலிதா ஆட்சியிலும் நடந்தன. பெரியார் மறைந்தபோது, கலைஞர் அனைத்துச் சாதியினரும் அர்ச்சக ராகலாம் என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலையை குறிப்பிட்டு, “தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றாமல், அவரை புதைத்து விட்டோம்” என்று வருத்தத்துடன் கூறினார்.*

*அனைவருடைய கனவும் இப்போது முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் நனவாகிவிட்டது. தமிழ்நாட்டில் இப்போது 20 அர்ச்சகர் பயிற்சி பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இதுமட்டுமல்லாமல் தற்போது 10 கோவில்களில் தேவாரம், திருவாசகம், திவ்யபிர பந்தம், பாசுரங்கள் பாட 10 பெண் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த 10 கோவில்களிலும் இப்போது இந்த பெண் ஓதுவார்கள் பாடும் இறைபக்தி பாடல்கள் இனிமையாக கேட்கின்றன.*

*மேலும், ஸ்ரீரங்கம் ரங்கநாதசாமி கோவில் நடத்தும் அர்ச்சகர் பயிற்சி பள்ளிக்கூடத்தில் படித்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த பட்டதாரி பெண்கள் என். ரஞ்சிதா, எச்.ரம்யா, சி. கிருஷ்ணவேணி ஆகியோருக்கு பயிற்சி முடித்ததற்கான சான்றிதழை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.*

*இவர்கள் பணி அனுபவம் பெற்று தங்களை செம்மைப் படுத்திக்கொள்ளும் வகையில், மூத்த அர்ச்சகர்களின் கீழ் ஓராண்டுக்கு அனுபவம் பெற, மாத ஊக்கத்தொகையாக ரூ.8 ஆயிரம் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த ஓராண்டு பயிற்சிக்கு பிறகு அவர்கள் கோவில்களில் அர்ச்சகர்களாக பணிபுரிய உள்ளார்கள்.*

*இந்த ஆண்டும் அர்ச்சகர் பயிற்சியில் 15 பெண்கள் புதிதாக சேர்ந்துள்ளனர். அனைத்து சாதியினரையும் தாண்டி, இப்போது பெண்களும் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டதன் மூலம் பெரியார் கண்ட கனவை முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் நிறைவேற்றியு ள்ளார். அம்மன் கோவில்கள், பெண் தெய்வங்கள் சக்தியோடு இருக்கும் தமிழ்நாட்டில், நம் தெய்வங்களுக்கு பூஜை செய்ய பெண் அர்ச்சகர்கள் இல்லையே, தேவாரம், திருவாசகம் பாட பெண் ஓதுவார்கள் இல்லையே என்ற குறை இப்போது தமிழ்நாட்டில் நீங்கிவிட்டது. சமூகநீதி நிலை நாட்டப்பட்டுள்ளது.*

*இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.*

---



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் பூனிமாங்காடு அரசு பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிடம் துவக்க விழா நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கட்டிடம் கட்ட பணிகளை துவக்கி வைத்தார், உடன் திருவாலங்காடு மேற்கு ஒன்றிய செயலாளர் கூளூர் எம்.இராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் ஆர்த்தி ரவி, ஊராட்சி மன்ற தலைவர் நற்குணம் நிர்வாகிகள் கமலநாதன், குமார், அர்ஜுனன் , குப்பன், ஆர்.யுவராஜ், மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் ஊராட்சி மன்ற தலைவர்கள் அரசு அதிகாரிகள் கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் உள்ளனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், ஆலோசனைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆயிரம் விளக்கு, அண்ணா நகர், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, ஆகிய பகுதிகளுக்கு மாணவர் அணி பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், நேர்காணல் நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நேற்று 26.9.2023 மாநில நிர்வாகிகள் எஸ்.மோகன், த.மன்னை சோழராஜன், முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு மாவட்ட நிர்வாகிகள் து. விக்டர், வி.எஸ்.கலை, சங்கீதா, மற்றும் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் முனைவர் ஜெகதீசன், எம்.எம்.டி.ஏ கார்த்திக், பிரசன்ன ராஜகுமாரி, எஸ்.கார்த்திக் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.